JUDICIAL MAGISTRATE COURT, AMBATTUR
DEPOSITION OF WITNESS

CC.No.172/2020 Date:10.11.2025 P.W. 1 / LW

| | |
|---|---|
| பெயர் | திரு. தாமஸ் |
| தந்தை பெயர், க/பெ | திரு. தசரதன் |
| முகவரி | நெ.8, 2 வது குறுக்கு தெரு, அயனம்பாக்கம் சென்னை |
| கிராமம் | |
| மாவட்டம் | |
| ஜாதி | |
| தொழில் | |
| மதம் | |
| வயது | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the 10th day of November 2025.

எதிரி ஆஜாில் உள்ளார்.

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவிரியில் வசித்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்தது தான் அது **அ.த.சா.ஆ.1** ஆகும். கடந்த 17.02.2019 அன்று மாலை 05.00 மணியளவில் அம்பத்தூர் வானகரம் நடுவே அத்திப்பட்டு என்ற இடத்தில் ஒரு நபர் அம்பத்தூர் பகுதியில் இருந்து நடந்து வந்து கொண்டிருந்தார். அப்பொழுது அவர் ஓரமாக சென்று கொண்டிருந்த போது அப்பொழுது பின் பகுதியில் வந்த டாடா இன்டிகா கார் அவர் மீது மோதியதில் அப்பொழுது எதிரே நிறுத்தி வைக்கப்பட்டிருந்த லாரியின் உள்ளே முன்பகுதியில் வீசி எரியப்பட்ட மோதிய வண்டியின் பதிவு எண் TN12 P 1878 என்று இருந்தது. அப்பொழுது சுற்று காவலில் இருந்த போலீசார் அவசர போலீஸ் 100 க்கு தகவல் தெரிவித்து அவரை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். அதன் பின்பு அவர் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டதாக தகவல் தெரிவித்தார்கள். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

## எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்று சொன்னால் சரிதான். காயம்பட்டவருக்கு நான் உதவுவதற்காக தான் சென்றேன். விபத்து ஏற்படுத்திய கார் ஓட்டுநரை நான் பார்க்கவில்லை என்று சொன்னால் சரிதான். விபத்து ஏற்படும் போது அந்த நபருடன் யாரேனும் இருந்தார்களா என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. நான் ஆம்புலன்ஸ்க்கு தகவல் தெரிவித்தார்கள். போலீசார் தான் ஆம்புலன்ஸ்க்கு தகவல் தெரிவித்தார்கள். சுற்று காவல் போலீசார் சம்பவயிடத்திற்கு உடனடியாக வந்த விவரங்களை நான் போலீசார் வாக்குமூலத்தில் சொல்லவில்லை. புகாரை நான்

எழுதவில்லை, போலீசார் தான் எழுதினார்கள். விபத்து ஏற்படுத்திய வாகன எண்ணை போலீசார் சொல்லியதன் பேரில் கையில் எழுதி வைத்துக்கொண்டு முதல் விசாரணை சாட்சியம் அளித்தேன் என்று சொன்னால் சரிதான். சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றும் இறந்து போன நபருக்கு காப்பீடு தொகை பெற்று தருவதற்காக போலீசாரின் வேண்டுகோளுக்கிணங்க பொய்யாக புகார் தந்தேன் என்றால் சரியல்ல. விபத்தில் இறந்த நபர் பற்றி விவரங்களும் அவர் மருத்துவமனையில் இறந்துவிட்டார் என்ற விவரங்களும் போலீசார் சொல்லி தான் எனக்கு தெரியும் என்றால் சரிதான்.

**மறு விசாரணை –** இல்லை

Typed to my dictation in open Court.
Read over to the witness and admitted
by the witness as correct.

Judicial Magistrate,
Ambattur